(எட்டாவது பாராளுமன்றம் -மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 27.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2019 பெப்ரவரி 21, வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**அதிமேதகு மைத்திரிபால சிறிசேன,** இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் சனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சரும் மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சரும்

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ ரவி கருணாநாயக்க,** மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,** அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவலகள் அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ திலக் மாரபன,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மங்கள சமரவீர,** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல,** உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்கி ஜயவர்தன,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** மின்வலு, புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,** சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் மான்னப்பெரும,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வடிவேல் சுரேஷ்,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ புத்திக பத்திறண,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன**

**கௌரவ மஹிந்த அமரவீர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம**

**கௌரவ லஸந்த அலகியவன்ன**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ பியசேன கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ மொஹான் லால் கிரேரு**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ அநுராத ஜயரத்ன**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா**

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ எஸ். பீ. நாவின்ன**

**கௌரவ மனுஷ நாணாயக்கார**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ முஹம்மது நசீர்**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ டிலான் பெரேரா**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ லக்ஷ்மன் வசந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே**

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த**

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

**கௌரவ கௌரவ சாந்த பண்டார**

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே**

**கௌரவ பைஸர் முஸ்தபா**

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ சீ. பீ. ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ ரொசான் ரணசிங்க**

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**

**கௌரவ நிமல் லான்சா**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி**

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ கஞ்சன விஜேசேகர

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ ச. வியாழேந்திரன்

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ குமார வெல்கம

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ மஹிந்த சமரசிங்க

கௌரவ சந்தித் சமரசிங்க

கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்

கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய

கௌரவ முத்து சிவலிங்கம்

கௌரவ வசந்த சேனாநாயக்க

கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன

கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன

கௌரவ மாவை சோ. சேனாதிராசா

கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41ஆ(6) உறுப்புரையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான (2018.07.01 - 2018.09.30) நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குக் கூற்றினைச் சமர்ப்பித்து அவ் அறிக்கையை சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தில் இரசாயன விஞ்ஞானங்கள் துறையொன்றை நிறுவுதல் தொடர்பில் கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 திசம்பர் 05 ஆம் திகதிய 2100/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து மேற்படி கட்டளையை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையை உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்** : அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ லசந்த அலகியவன்ன, எட்டாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடருக்கான அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் முதலாவது அறிக்கையைச் (2017.06.06 முதல் 2017.12.08 வரை) சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) அநுராதபுரம், அபய இடம், 5 ஆம் ஒழுங்கை, இல. 35/ஏ யில் வதியும் திரு. சரத் ராஜபக்ஷவினது 2018.10.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார சமர்ப்பித்தார்.

(2) (i) நீர்கொழும்பு, ஐம்பது ஏக்கர், கிம்புலாபிட்டிய வீதி, இல. 252/2 இல் வதியும் செல்வி இசுரி அமாயா வீரசிங்கவினது 2018.03.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) ராகம, பட்டுவத்த, இல. 75 பீ யில் வதியும் திருமதி டப்ளியூ.ஏ.எஸ். மல்லிகா பெரேராவினது 2016.09.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ நிமல் லான்சா சமர்ப்பித்தார்.

(3) (i) கோணபினுவல, பத்தேகம வீதி, 'செவ்வந்தி' எனும் முகவரியில வதியில் திரு. டி.எம்.ஜி. சுசில் விஜேசேகரவினது 2018.10.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) தொடந்தூவ, காலி வீதி, இல. 326 இல் வதியும் திரு. எம். துசார பத்மநாத்தினது 2018.10.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) அம்பேகம, பத்தேகம வீதி, மோல்பதல சந்தியில் வதியும் திரு. எம்.கே. திசரு கயந்தவினது 2018.09.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ மொஹான் பிரிதர்ஷன த சில்வா சமர்ப்பித்தார்.

(4) கணேமுல்ல, மத்தேகொட, இல. 12 ஏ யில் வதியும் திரு. கே.ஜி.எம். சில்வாவினது 2018.10.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ இந்திக அநுருத்த ஹேரத் சமர்ப்பித்தார்.

30 (10) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. பாராளுமன்ற அமர்வுகள் :** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 8 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 7.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.30 மணிக்கு 8(5) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. பாராளுமன்ற அலுவல்கள் (இல.1):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2019)" பரிசீலனைக்காக 75(1) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள "இருபத்தி ஆறு" எனும் சொற்களுக்குப் பதிலாக "இருபத்தி ஐந்து" எனும் சொற்களை இடுவதன் மூலம் இக்கட்டளை தொழிற்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. பாராளுமன்ற அலுவல்கள் (இல.2):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 2019 மார்ச்சு 06 ஆம் திகதி புதன்கிழமை, 07 ஆம் திகதி வியாழக்கிழமை, 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 09 ஆம் திகதி சனிக்கிழமை, 11 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய நாட்கள் "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2019)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. பாராளுமன்ற அமர்வுகள் (இல.1):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 75(2) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2019)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2019 மார்ச்சு 06 ஆம் திகதி புதன்கிழமை முதல் 11 ஆம் திகதி திங்கட்கிழமை வரையிலான நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும், பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 7.00 மணி வரையும் இருக்குமாக:

ஆயினும், பி.ப. 6.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) மற்றும் (6) இன் ஏற்பாடுகள் தொழிற்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. பாராளுமன்ற அமர்வுகள் (இல.2):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 75(2) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2019)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2019 மார்ச்சு 12 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப.12.30 மணி வரையும், பி.ப 1.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1):** வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சார்பாக அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 58 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 39 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களை தற்காலிகமாக பதிவுசெய்தல் தொடர்பில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 2085/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2):** வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சார்பாக அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 58 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலைக்கான நடவடிக்கைமுறைகள் மற்றும் தராதரங்கள் தொடர்பில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 2085/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.01.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. ஒத்திவைப்பு (அரசியலமைப்புப் பேரவையினால் வழங்கப்படும் நியமனங்களின் போதான நடைமுறை) :** "இப்பாராளுமன்றம் தற்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்படடது.

(பி.ப. 1.04 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.31 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 5.31 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

அப்போது பி.ப. 8.30 மணியாகிவிடவே, பிரதிச் சபாநாயகர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2019. பெப்ரவரி 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.